بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 23/10/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

போதுமென்ற மனம் மற்றும் எளிமை தொடர்பான ஈமானுக்கு ஒளியூட்டும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்று குறிப்புகள்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் எளிய வாழ்க்கை பற்றிய குறிப்பை நான் தொடங்கியிருந்தேன். அன்னாரின் எளிமையின் ஓர் அம்சம் என்னவென்றால், சில நேரங்களில் தமக்குத் தேவையான பொருட்களைத் தாமே கடைவீதிக்குச் சென்று வாங்கி வருவார்கள்.

இது தொடர்பாக **ஹஸ்ரத் அபூ ஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்**: "ஒரு நாள் நான் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடன் கடைவீதிக்குச் சென்றேன். அன்னார் ஆடை வியாபாரியொருவரின் அருகில் அமர்ந்தார்கள். பின்னர் அன்னார் நான்கு திர்ஹம்களுக்கு ஒரு தளர்வான கால்சட்டையை விலைக்கு வாங்கினார்கள்."

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் என்னிடம் வந்தார்கள். அப்போது என்னிடம் அன்சாரிகளைச் சேர்ந்த இரண்டு சிறுமிகள் சில கவிதைகளைப் பாடிக்கொண்டிருந்தனர்."

அவர்கள் தொழில்முறை பாடுபவர்கள் அல்லர்; மாறாக, அவர்கள் தமது தோழிகள் என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

"ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பாட்டு பாடும் சத்தத்தைக் கேட்டபோது, என்ன இது! அல்லாஹ்வின் தூதருடைய வீட்டில் நீங்கள் ஷைத்தானின் இசைக்கருவிகளை (பாட்டு வாத்தியங்களை) வைத்துக் கொண்டு அமர்ந்துள்ளீர்களா என்று கேட்டார்கள். அது பெருநாளாக இருந்தது. இதனைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அபூபக்ரே! ஒவ்வொரு சமுதாயத்திற்கும் பெருநாள் உண்டு; இது நமது பெருநாளாகும். எனவே இவர்களைப் பாட விடுங்கள்; தடுக்காதீர்கள் என்று கூறினார்கள்."

இது ஓர் எளிமையான, இயல்பான சூழல் ஆகும். இங்கு எந்தவொரு ஷிர்க்கான பேச்சும் இடம்பெறவில்லை. எனவே அவர்களைப் பாட விடுங்கள் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிறுவர்களைக் கடந்து செல்லும்போது அவர்களுக்கு ஸலாம் கூறுவார்கள். அவர்களின் தலையைத் தடவிக்கொடுப்பார்கள். அவர்களுக்காகத் துஆ செய்வார்கள். எவரேனும் ஒருவர் அன்னாருக்கு அருகில் வந்து அமர்ந்தாலோ அல்லது ஏதேனும் தேவைக்காக அன்னாரிடம் பேசினாலோ, அந்த நபர் தாமாகவே எழுந்து செல்லும் வரை அன்னார் அந்த நபருடன் மிகுந்த பொறுமையுடன் அமர்ந்திருப்பார்கள். இந்த எளிமையும் பொறுமையும் வருபவருக்கு தனது கருத்தை

நிம்மதியாக எடுத்துரைப்பதற்கான ஆறுதலையும் தைரியத்தையும் அளிக்கும். எனவே, இந்த வழிமுறையை நமது பொறுப்பாளர்களும் பின்பற்ற வேண்டும்.

ஹஸ்ரத் இமாம் ஹுஸைன் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "நான் என் தந்தையிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சபையைப் பற்றி கேட்டேன். அதற்கு அவர்கள், அன்னார் எழும்போதும் அமரும்போதும் இறைவனை நினைவு கூர்ந்து கொண்டே இருப்பார்கள்; ஏதேனும் ஒரு சமூகத்தாரிடம் சென்றால் சபையில் எங்கு இடம் கிடைக்கிறதோ அங்கு அமர்வார்கள். தம்முடன் அமர்ந்திருப்பவர்களில் எவரும், மற்றொருவருக்கு தம்மைவிட அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது என்று எண்ணாத வகையில் நடந்துகொள்வார்கள். அன்னாரின் தாராள மனப்பான்மையும் நற்குணமும் அனைவருக்கும் பொதுவானதாக இருந்தது; அன்னார் அவர்களுக்குத் தந்தையைப் போன்றவராகிவிட்டார்கள்."

மதீனா ஹிஜ்ரத் செய்த போது, குபா நகருக்கு வெளியே அன்னார் ஒரு மரத்தின் கீழ் அமர்ந்திருந்தார்கள். அப்போது மதீனா வாசிகளில் பெரும்பாலாருக்கு அன்னாரின் முகம் (அடையாளம்) தெரிந்திருக்கவில்லை. மக்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களையே அல்லாஹ்வின் தூதர் என்று எண்ணிக் கொண்டிருந்தனர்; மேலும் மிகுந்த கொள்கைப் பிடிப்புடன் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை நோக்கியே அமர்ந்திருந்தனர். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இதையெல்லாம் பார்த்ததும் உடனடியாகத் தமது போர்வையை எடுத்துக் கொண்டு சூரியனை நோக்கி நின்று கொண்டு, அல்லாஹ்வின் தூதரே! தங்கள் மீது வெயில் படுகிறது; நான் தங்களுக்கு நிழல் தருகிறேன் என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்துல்லாஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "நான் ஒருமுறை நோய்வாய்ப்பட்டேன். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் என் வீட்டிற்கு வருகை தந்தார்கள்; அப்போது நான் மயக்கமுற்ற நிலையில் இருந்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உளூச் செய்துவிட்டு, அந்த உளூவின் தண்ணீரை என் மீது தெளித்தார்கள்; அப்போது எனக்கு நினைவு திரும்பியது."

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையில் எந்தவிதமான செயற்கைத்தனமும் இருக்கவில்லை; எளிமையே இருந்தது. அன்னார் தமது தோழர்களுக்கும் எளிமையைக் கடைப்பிடிக்குமாறு அறிவுறுத்துவார்கள்; இதனால் அவர்களிடமும் தொடர்ந்து சீர்திருத்தம் ஏற்பட வேண்டும் என்பதற்காக.

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: "பத்ர் போர்நாளில் மூன்று பேருக்கு ஓர் ஒட்டகம் என்ற விதத்தில் முறை வைத்து பயணம் செய்தனர். அன்னாருடன் பயணம் செய்தவர்கள், அல்லாஹ்வின் தூதரே! தாங்கள் ஒட்டகத்தின் மீது அமருங்கள்; நாங்கள் நடந்து கொள்கிறோம் என்று கூறினர். அதற்கு அன்னார், நீங்கள் இருவரும் என்னைவிட அதிக பலசாலிகள் அல்லர்; நற்கூலியைப் பெறும் விஷயத்தில் நானும் உங்கள் இருவரையும்விடத் தேவையற்றவனாக இல்லை. எனவே, எந்த விதிமுறை தீர்மானிக்கப்பட்டதோ அதற்கேற்பவே செயல்பட வேண்டும் என்று கூறினார்கள்."

ஹஸ்ரத் அம்ர் பின் ஹாரிஸ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: "அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இறக்கும்போது எந்தத் தீனாரையும் (தங்க நாணயத்தையும்) எந்த திர்ஹமையும் (வெள்ளி நாணயத்தையும்) விட்டுச் செல்லவில்லை. எந்த ஆண் அடிமையையும், எந்தப் பெண் அடிமையையும் விட்டுச் செல்லவில்லை. அன்னார் சவாரி செய்த வெள்ளை நிறக் கோவேறு கழுதையையும், தமது ஆயுதங்கள் மற்றும்

வழிப்போக்கர்களுக்காகத் அன்னார் வக்ஃப் செய்த ஒரு நிலத்தைத் தவிர வேறு எதையும் விட்டுச் செல்லவில்லை.”

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: “ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் மிகச் சிறந்த உணவுகளை உண்டார்கள் என்பதும் (வரலாற்று ரீதியாக) நிரூபிக்கப்பட்டுள்ளது; அதேசமயத்தில் அன்னார் பட்டினியாய்க் கிடந்திருக்கிறார்கள் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. சில வேளைகளில் அன்னார் எந்தளவுக்கு நீண்ட பட்டினியை எதிர்கொண்டார்கள் என்றால், தங்கள் வயிற்றில் கல்லைக் கட்டிக்கொள்ள நேரிட்டது. ஆயினும், ஒவ்வொரு நிலையிலும் அன்னாரின் வாழ்க்கை நன்றியுணர்வும் எளிமையும் நிறைந்ததாகவே கழிந்தது.”

ஹஸ்ரத் அபூ சயீத் குத்ரி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை மிகவும் எளிமையானதாக இருந்தது. அன்னார் எந்தவொரு வேலையையும் இழிவாகக் கருதமாட்டார்கள். அன்னார் தமது ஒட்டகத்திற்குத் தாமே தீவனம் வைப்பார்கள்; வீட்டு வேலைகளைச் செய்வார்கள்; தமது காலணிகளைத் தாமே பழுதுபார்த்துக் கொள்வார்கள்; ஆடைகளுக்குத் தாமே தையல் போடுவார்கள்; பணியாளரைத் தம்முடன் அமரவைத்து உணவு உண்ணச் செய்வார்கள்; மாவு அரைக்கும்போது அவர் சோர்வடைந்தால் அதில் அவருக்கு உதவி செய்வார்கள்; கடைவீதியிலிருந்து வீட்டிற்கான பொருட்களைத் தாமே சுமந்து வருவதற்கு கூச்சப்பட மாட்டார்கள்; ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடின்றி அனைவருடனும் கை குலுக்குவார்கள்; ஸலாம் கூறுவதில் முந்திக்கொள்வார்கள். எவரேனும், பேரீச்சம்பழ(த்தை உண்ண) விருந்துக்கு அழைத்தாலும் அதனை அற்பமாகக் கருதாமல் ஏற்றுக்கொள்வார்கள். அன்னார் மிகுந்த இரக்கமுள்ளவராகவும், மென்மையான சுபாவம் கொண்டவராகவும், சாந்தமான இயல்புடையவராகவும் இருந்தார்கள். அன்னாரின் வாழ்க்கை முறை மிக எளிமையானதாக இருந்தது; எப்போதும் மலர்ந்த முகத்துடன் பழகுவார்கள்; புன்னகை அன்னாரின் முகத்தில் பிரகாசித்துக்கொண்டிருக்கும். அன்னார் கலகலவென்று சத்தமாக சிரிக்கமாட்டார்கள். இறைவன் மீதான அச்சத்தால் கவலையுடனும் சிந்தனையுடனும் இருப்பார்கள்; ஆனால் முகச்சுளிப்போ கடுமையோ சிறிதும் இருந்ததில்லை; மிகுந்த பணிவுடையவர்களாக இருந்தார்கள்; ஆனால், அதில் எந்தவிதமான பலவீனமோ தைரியமின்மையோ இருந்ததில்லை. மிகுந்த தாராள குணமும், மென்மையான உள்ளமும், கருணையும் கொண்டவராக இருந்தார்கள். ஒவ்வொரு முஸ்லிமிடமும் அன்போடு நடந்து கொள்வார்கள்; ஏப்பம் வரும் அளவுக்கு வயிறு நிரம்ப உண்ண மாட்டார்கள்; பேராசையுடனும் சுயநலத்துடனும் எதற்காகவும் ஒருபோதும் கையை நீட்டியதில்லை; மாறாக, பொறுமையாளராகவும் நன்றியுணர்வுள்ளவராகவும், குறைந்த அளவிலேயே திருப்தி கொள்பவராகவும் விளங்கினார்கள்.”

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் அன்பளிப்பை ஏற்றுக்கொள்வார்கள்; தாமும் அன்பளிப்பை அனுப்புவார்கள். மிகச் சிறிய அன்பளிப்பாக இருந்தாலும் அன்னார் அதனை ஏற்றுக்கொள்வதுடன் அதற்குப் பதிலாகத் தாமும் அன்பளிப்பை வழங்குவார்கள். அன்னார் எந்தவோர் உணவையும் ஒருபோதும் குறை சொன்னதில்லை. அந்த உணவு அன்னாருக்குப் பிடித்திருந்தால் உண்ணுவார்கள். இல்லையெனில் அதனை விட்டுவிடுவார்கள்.”

அன்னார் கரடுமுரடான கம்பளி ஆடையை அணிந்தார்கள்; பழுதுபார்க்கப்பட்ட காலணிகளை அணிந்தார்கள். அன்னார் எப்போதும் கடினமான உணவையே

உட்கொண்டார்கள் (அதாவது, நீர் இன்றித் தொண்டைக்குள் இறங்காத வாற்கோதுமையின் தடிமனான ரொட்டி). மேலும், எளிய ஆடைகளை அணிந்தார்கள்.

அன்னார் வாற்கோதுமைக்கு ஈடாகத் தமது கவச உடையை அடமானம் வைத்திருந்தார்கள். ஒருமுறை அன்னார் ஒரு துண்டு ரொட்டியின் மீது பேரீச்சம்பழத்தை வைத்து, இதுவே இதன் குழம்பு ஆகும் என்று கூறினார்கள். இவ்வாறு பேரீச்சம்பழத்துடன் ரொட்டியை உட்கொண்டார்கள். ஒருமுறை அன்னாரிடம் சூடான உணவு கொண்டுவரப்பட்டது. அன்னார் அதனை உட்கொண்டுவிட்டு, அனைத்துப் புகழும் அல்லாஹ்வுக்கே உரித்தாகுக; இவ்வளவு நீண்ட காலத்திற்குப் பிறகு இன்றுதான் சூடான உணவை உண்கிறேன் என்று கூறினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணித்தபோதுதான் நாங்கள் பேரீச்சம்பழத்தையும் தண்ணீரையும் வயிறார உண்ணும் நிலை ஏற்பட்டது.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “தூயவர்களும் பரிசுத்தவான்களும் வயிறார உண்பது என்பது, எவர்களைக் குறித்து ‘அவர்கள் மிருகங்களைப்போல் உண்கிறார்கள், நரகம் அவர்களுக்குரிய தங்குமிடமாகும்’ என்று அல்லாஹ் கூறியுள்ளானோ அத்தகையவர்களின் வயிறார உண்ணுதலைப் போன்றது அல்ல. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதாவது வயிறார உண்பது என்பது முற்றிலும் வேறுபட்டதொரு விஷயமாகும்; இன்பம் அனுபவிப்பதை(யும் அதாவது, சுவை காண்பதையும் அதிலிருந்து பயன் பெறுவதையும்) தமது முக்கிய நோக்கமாகக் கொண்டு, உடலாசைகளைப் பூர்த்தி செய்வதிலேயே கவனத்தைச் செலுத்துபவர்களுடன் அந்த வயிறார உண்ணுதலை ஒப்பிட்டால், அதனை நாம் ஒருபோதும் வயிறார உண்ணுதல் என்று கூற முடியாது.

தூயவர்களும் பரிசுத்தவான்களும் வயிறார உண்பதன் பொருள் வேறு; அசுத்தமானவர்களும் உண்பதையே குறிக்கோளாகக் கொண்டவர்களும் வயிறார உண்பதன் பொருள் முற்றிலும் வேறு. தூயவர்கள், தங்களது பசி நீங்கி, உடலின் இயக்கங்களுக்கும் செயல்பாடுகளுக்கும் சக்தி கிடைத்துவிடும் அளவுக்கு உண்ணும் உணவையே வயிறார உண்ணுதல் என்று குறிப்பிடுகின்றனர். சுருக்கமாகக் கூறின், நம்பிக்கை கொண்ட ஒருவரின் வயிறார உண்ணுதல் என்பது, தனது முதுகை நிமிர்த்தி வைக்கவும், கடமையான உரிமைகளை நிறைவேற்றவும் தேவையான அளவு உணவை உண்பதே ஆகும். எனவே, தூதர்களின் தலைவரான அன்னாருடைய வயிறார உண்ணுதலைப் பொதுமக்களின் வயிறார உண்ணுதலோடு ஒப்பிடுவது முற்றிலும் தவறான ஒப்பிடுதலாகும். இவ்வாறே, பலர் அன்னாருடைய மகத்தான அந்தஸ்தைப் புரிந்து கொள்ளாமலும், சொற்கள் பயன்படுத்தப்பட்ட சூழலைக் கவனத்தில் கொள்ளாமலும் தங்களைத் தவறான புரிதலுக்கு ஆளாக்கிக் கொண்டனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எப்போதாவது, நான் வயிறார உண்டுவிட்டேன் என்று கூறியிருப்பது, தங்களது வாழ்க்கையின் பிரதான குறிக்கோளே உணவு உண்பது மட்டும்தான் என்று கருதிக்கொண்டிருப்பவர்களின் கூற்றின் பொருளைக் குறிப்பதில்லை.

சுருக்கமாகக் கூறின், தூய்மையானவர்களின் செயல்களையும் சொற்களையும் அவர்களின் உயர்ந்த அந்தஸ்துகளுக்கு ஏற்பவே புரிந்து கொள்ள வேண்டும்; அவர்களின் விஷயங்களை மற்றவர்களுடன் ஒப்பிடுவது சரியானதல்ல. அவர்கள் பார்ப்பதற்கு இந்த உலகைச் சார்ந்தவர்களாகவே இருந்தாலும், உண்மையில் அவர்கள் இந்த உலகத்திற்கு அப்பாற்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்.”

“நான் எப்போதெல்லாம் ஒருநாளில் இருமுறை வயிறார உணவு உட்கொள்கிறேனோ, அப்போதெல்லாம் எனக்கு அழுகை வருகிறது” என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். ஏன் உங்களுக்கு அழுகை வருகிறது என்று அவர்களிடம் கேட்கப்பட்டபோது, “உலகைவிட்டுப் பிரிந்தபோது அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் எந்த நிலையில் இருந்தார்களோ, அந்த நிலை எனக்கு நினைவுக்கு வந்துவிடுகிறது” என்று அவர்கள் பதிலளித்தார்கள். “அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஒருபோதும் ஒரு நாளில் இருமுறை ரொட்டியையும் இறைச்சியையும் வயிறார உண்டதில்லை.”

ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் உபைது (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: “அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் உணவு கொண்டுவந்து வைக்கப்பட்டது. அப்போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் நபியே! தாங்கள் சாய்ந்து கொண்டு உண்ணுங்கள்; இது தங்களுக்கு அதிக சௌகரியமாக இருக்கும் என்று கூறினார்கள். அதற்கு அன்னார் தமது நெற்றியை நிலத்தை நோக்கித் தாழ்த்தினார்கள்; எந்தளவுக்கு என்றால் அது நிலத்தைத் தொட்டுவிடும் போலிருந்தது. பின்னர் அன்னார், நான், ஒரு சாதாரண அடியான் உண்பதைப் போலவே உண்பேன்; ஒரு சாதாரண அடியான் அமர்வதைப் போலவே நானும் அமர்ந்து கொள்வேன்; ஏனெனில் நான் ஓர் அடியான் மட்டுமே ஆவேன் என்று கூறினார்கள்.”

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்: “ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பரிசுத்தமான வாழ்க்கையைப் படியுங்கள்; இதன் மூலம் அன்னார் எத்தகைய நற்பண்புடையவராக இருந்தார்கள் என்பது உங்களுக்குத் தெரியவரும். அன்னார் மிகுந்த கம்பீரமானவராக இருந்தபோதிலும், பலவீனமான மூதாட்டி ஒருவர் அன்னாரைத் தடுத்து நிறுத்தினால் கூட, அந்த மூதாட்டி அனுமதி வழங்காதவரை அன்னார் அப்படியே நின்றுகொண்டிருப்பார்கள்.”

குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் கூறும்போது, அன்னாரின் அந்தஸ்து மிக உயர்ந்த அந்தஸ்தாகும். அன்னாரின் ஒவ்வொரு செயலிலும் ஒரு முன்மாதிரி உள்ளது என்று கூறினார்கள்.

اَللّٰهُمَّ صَلِّ عَلٰى مُحَمَّدٍ وَّعَلٰٓى اٰلِ مُحَمَّدٍ وَّ بَارِكْ وَسَلِّمْ اِنَّكَ حَمِيْدٌ مَّجِيْدٌ

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹ்மது)